**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**
**அ.வ.எண்.80/2022**

**தேதி : 11.12.2023**

**(வா.சா.– 1) – திருமதி. ஈஸ்வரி**

**சாட்சி அழைக்கப்பட்டு, 14–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (14-ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் எட்டாம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி அட்டவணையில் சின்னச்சாமியின் மனைவி தான் தெய்வாத்தாள் என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதேபோல் சின்னச்சாமிகவுண்டர் மகள் தான் காளியாத்தாள் என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வேறு யாரும் சாட்சியாக விசாரிக்கவுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தெய்வாத்தாள் எப்போது இறந்தார் என்றால் 7, 8 வருடங்கள் இருக்கும். அவருடைய இறப்புச் சான்றும், வாரிசு சான்றும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காளியாத்தாளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1960–க்கு பின்பு திருமணம் நடந்தது. அவருக்கு திருமணம் நடந்து அவரது கணவருடன் கோதைமங்கலத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். காளியாத்தாள் எப்போது இறந்தார் என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பாக காளியாத்தாள் இறந்தார். காளியாத்தாள் இறப்புச் சான்றும், வாரிசு சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இறப்புச் சான்று தாக்கல் செய்துள்ளேன். இறப்புச் சான்றும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராது 1 லக்க சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. அதில் என்ன பயிர் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தற்போதைக்கு எதுவும் பயிர் செய்யப்படாமல் இருக்கிறது. பிராது சொத்தை ஆரம்பத்தில் இருந்து சின்னச்சாமிகவுண்டரும், 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமிகவுண்டரும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி ஒரு பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தை வைத்து பாக ஆவணம் ஏற்படுத்தியதாக எனக்கு எப்போது தெரியும் என்றால், 2022 ஆம் ஆண்டு தெரியும். சின்னச்சாமிகவுண்டர் உயிருடன் இருக்கும்போது 1997 ஆம் ஆண்டு 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி மற்றும் 4–ம் பிரதிவாதி விக்னேஷ் ஆகியோர் தாவா சொத்தை ஈடு வைத்து கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்

சொல்லியிருக்கிறார்கள். மேற்படி கடனை கருப்புச்சாமி தான் தீர்த்தார் என்றால் என்னிடமும் பணம் கேட்டார்கள், நானும் கடனை செலுத்த பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பாக ஆவணப்படி பிராது 3–வது லக்க சொத்தை 3 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து வருவதாக சொன்னால் சரிதான். 2008 ஆம் ஆண்டிலேயே 3, 4, 5 பிரதிவாதிகள் அவர்கள் பெயரில் தனிப்பட்டா வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான், போலியான உயிலை வைத்து பட்டா மாற்றியுள்ளார்கள். மேற்படி உயில் போலியானது என்று சொல்வதை நிரூபிக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 3 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் தனிப்பட்டா வாங்கியதன்மேல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பாகவிஸ்தி ஆவணத்திற்கு பிறகு கருப்புச்சாமி பல்வேறு நபர்களிடம் அடமானம் மற்றும் கிரைய ஆவணங்கள் ஏற்படுத்திய சங்கதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1 முதல் 9 பிரதிவாதிளிடம் கலந்தாலோசித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அவர்களிடம் நான் ஒன்றும் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து கிரையச் சொத்தா அல்லது பூர்வீகச் சொத்தா என்றால் பூர்வீகச் சொத்து. எனது தாயார் காளியாத்தாள் சின்னச்சாமிகவுண்டர் இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். தெய்வாத்தாள் சின்னச்சாமிகவுண்டர் இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. சின்னச்சாமிகவுண்டர் இறந்த பின்பு தெய்வாத்தாள் இறந்தார். நான் பிராதில் சொல்லியுள்ளதுபோல் தாவா சொத்தை நானோ, எனது தாயாரோ அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்து சம்மந்தமாக 3 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்படுத்திய பாகவிஸ்தி ஆவணம் எழுதும்போது எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. 06.10.2016 ஆம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகளிடமிருந்து பொது அதிகாரம் பெற்ற 12–ம் பிரதிவாதி வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை 11–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 14–ம் பிரதிவாதி தாவா 1 லக்க சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து, வருவாய் ஆவணங்களை சரிபார்த்து தான் கிரையம் வாங்கினார் என்றும், அவருடைய கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் சரியான மறுபயன் மூலம் தான் கிரையம் செய்துள்ளார் என்றும், மேற்படி கிரையத்தை செல்லத்தக்கதல்ல என சொல்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் காளியம்மாளுக்கு பாகம் இருந்தாலும், 2008 ஆம் ஆண்டு முதல் அவரை

உடைமை நீக்கம் செய்து 3 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து வருவதால் எங்களுக்கு எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 11–ம் பிரதிவாதி, 13–ம் பிரதிவாதிக்கு ஒரு பரிவர்த்தனை ஆவணத்தை 30.01.2017 எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அவர் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வந்தார் என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. 13–ம் பிரதிவாதி, 14–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 14–ம் பிரதிவாதி வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து தாவா 1 லக்க சொத்தை தற்போது வரை அனுபவித்து வருவதாக சொன்னால் எனக்கு தெரியாது. தாவா 1 லக்க சொத்தை பொறுத்த அளவில் வங்கியில் கடன் பெற்று பல்வேறு அபிவிருத்திகள் செய்து 14–ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருவதாக சொன்னால் சரிதான். தாவா 1 லக்க சொத்தில் பலன் தரக்கூடிய தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. நான் எந்தக் காலத்திலும் தாவா சொத்துக்களுக்கு போனதில்லை என்றும், அதனால் தாவா சொத்தின் அமைப்பு பற்றி தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, 2009 ஆம் ஆண்டு முதல் நான் தாவா சொத்தில் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 14–ம் பிரதிவாதி சரியான நபரிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றும், அவருடைய கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. 1 முதல் 9 பிரதிவாதிகளும், நானும் கூட்டுச் சேர்ந்து 14–ம் பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொன்னால் சரியல்ல. நான் சின்னச்சாமிகவுண்டரின் வாரிசு என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாததால் அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது தான் என்றால் சரியல்ல. தாவா 1 லக்க சொத்தைப் பொறுத்து எனக்கோ, எனது தாயார் காளியாத்தாளுக்கோ எந்தக் காலத்திலும் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2023.12.11 17:28:38 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.